அனுப்புநர்
திரு சித.பெரியகருப்பன்,
மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர்
நலன் அலுவலர் (கூபொ) நேதாஜி
விளையாட்டரங்கம், வேலூர்–632 001.

பெறுநர்
மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

ந.க.எண்.135/2022, நாள். 06.09.2022

மதிப்பிற்குரிய ஐயா/அம்மையீர்,

பொருள்: விளையாட்டு – மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்புற கொண்டாடும் வகையில் 2022–2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா பிறந்த தின விரைவு மிதிவண்டி போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்டப் பிரிவின் சார்பாக 15.09.2022 அன்று நடத்துவது – அனைத்து வகைப்பள்ளி மாணவ, மாணவியர்களைப் போட்டிகளில் பங்கேற்கச் செய்து நிகழ்ச்சியினை சிறப்பித்துத் தர வேண்டுதல் – சார்பாக.

பார்வை: தலைமைச் செயல் அலுவலர்/உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை அவர்களின் செ.மு.ஆணை எண்.7246/ EM–3 / 2022, நாள் 25.08.2022

=====

பார்வையில் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்புறக் கொண்டாடும் வகையில் 2022–2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா பிறந்த தின விரைவு மிதிவண்டி போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வேலூர் மாவட்டப் பிரிவின் சார்பாக நடத்துவது குறித்து அறிவுரைகள் பெறப்பட்டுள்ளது.

இவ்வாண்டும், வேலூர் மாவட்ட விளையாட்டுப் பிரிவின் சார்பாக 15.09.2022 அன்று காலை சரியாக 6.30 மணிக்கு பேரறிஞர் அண்ணா பிறந்த தின விரைவு மிதிவண்டி போட்டிகள் நடத்தப்பட உள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போட்டிகளில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளைச் சேர்ந்த 13 வயது முதல் 17 வயது வரையிலான மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

போட்டியில் முதல் 3 இடங்களைப் பிடிப்பவர்களுக்கு தலா ரூ.5000/–, ரூ.3000/–, ரூ.2000/– என பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். 4 முதல் 10 இடங்களைப் பிடிப்பவர்களுக்குத் தலா ரூ.250/– வீதம் பரிசுத்தொகையும் தருதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும். பரிசுத்தொகைகள் காசோலையாகவோ அல்லது வங்கிமாற்று வழிமூலமோ தான் வழங்கப்படும்.

காட்பாடி அருகேயுள்ள சித்தூர் மேல்நிலைப்பள்ளி அமைந்துள்ள பிரம்மபுரம் என்ற இடத்திலிருந்து துவங்கப்பட்டு திரும்பி வரும் வகையில் நடத்தப்பட உள்ள இப்போட்டிகளில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளைச் சேர்ந்த 13 வயது முதல் 17 வயது வரையிலான மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் பங்கேற்கும்பொருட்டு தங்கள் அலுவலக இணையதள வழியாக (CEO Website)த் தகவல் தெரிவித்து நிகழ்ச்சியினை சிறப்பித்துத் தருமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர் (கூபொ),
வேலூர் மாவட்டப் பிரிவு.

நகல் – மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அவர்கள், வேலூர்.